உ

சிவமயம்



கைதடியைப் பிறப்பிடமாகவும் கைதடி நாவற்குழியை
வதிவிடமாகவும் கொண்ட

# அமரர். சின்னப்பா ஐயாத்துரை

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**07.10.2009**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



கைதடியை பிறப்பிடமாகவும் கைதடி நாவற்குழியினை
வதிவிடமாகவும் கொண்ட

# அமரர். சின்னப்பா ஜயாத்துரை

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**07.10.2009**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது அன்புத் தெய்வத்தின்

திருப்பாதங்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்

மனிதருள் மாணிக்கமாய்

அன்பு நிறைந்த பேரொளியாய்

இன் சொல் பேசி அன்புடன்

எம்மைப் பேணிக்காத்து

பண்புடனும், பாசத்துடனும், நேசத்துடனும்

வாழ்வாங்கு வாழ்ந்து இன்று

வானுறையும் தெய்வமாகிவிட்ட எமது

அன்புத் தெய்வத்தின் திருவடிக்

கமலங்களிற்கு இம் மலரினைக்

காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

— குடும்பத்தினர் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

அன்னை மடியில்:
13
04
1934

ஆண்டவன் அடியில்:
07
09
2009



கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும்
மறவன்புலோ கைதடி நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# சின்னப்பா ஐயாத்துரை

விரோதி வருடம் ஆவணி இருபத்திரண்டில்
திருதியை திதியதனில் - மாண்புசேர்
ஐயாத்துரை எனும் நாமத்தார் நம்மிறைவன்
நல்லடியை நண்ணினார் நன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

# தோத்திரப்பாடல்கள்

## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானை
காதலால் கூப்புவர் தம்கை.

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறி ஓர் தூவெண்மதி சூடி
காடுடைய சுடலைப்பொடி பூசி என்னுள்ளம் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்து ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமபுர மேவிய பெம்மான் இவனன்றே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரமன்று அருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
தில்லைச்சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பம் ஆம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரிய
கைமலர் உச்சிமேல் குவித்து
பண்ணினார் நிடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகி
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செயக் குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யரங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

---

## கைதடி வடக்கு பூதவராயர் ஓதற்பா

பேர் பூத்த கைதடி வாவி ஓரம்
பெருங் கோயில் கொண்டவனே அடியார் வேண்டப்
பார் பூத்த பெரிதம்பிரான் பேர் தாங்கி
பலருளும் பரம் பொருளே, நினது கோயில்
சீர் பூத்த அலங்காரக் கோயிலாகச்
சிருட்டிக்கும் தொண்டருக்குச் செல்வம் தேகத்
தார் பூத்த சுகம் நிதியம் யாவும் நல்கி
தகு துணையாய் நின்றருள்வாய் போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகளின் புலம்பல்

ஐயா என்று இனி யாரை நாம் அழைப்போம்
எம்மை அன்போடு அரவணைத்து
எம்மை ஆளாக்கிவிட்டு
இப்படி அரை வழியில்
தவிர்க்கவிட்டுப்போனதேனோ?
ஐயா என்று அழைக்கின்றோம்
ஓம் என்று பதிலில்லையே
எங்களை விட்டுச்செல்ல
எப்படி உங்களுக்கு மனம் வந்தது
பரிதாபமாக நிற்கின்றோம்
உடனே வாருங்கள் ஐயா.

**- பிள்ளைகள்**

## மருமக்கள் புலம்பல்

அன்புடன் வழிகாட்டி பல காட்டி
அரவணைத்த மாமாவே
பண்போடு நீங்கள் கொண்ட பாசத்தால்
இதயத்தில் அன்பையின்றி எதையும் கண்டதில்லை
வஞ்சக காலன் விடமென்று வந்து
உயிர் கொண்டு போனதென்ன
வதை செய்த துயருக்கெல்லாம்
சகை சொல்லி நிமிர்ந்து நின்றீர்
இன்று துவண்டு போனீரே
ஆனவரை கலங்கி விட்டோம்
அணைக்கத்தான் கரங்களில்லை
பாரினிலே உங்கள் போல்
உறவை இனி எப்போது
காண்போம் மாமா.

**- மருமக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகள் புலம்பல்

எமது அன்பான அப்பப்பாவே
எங்கே எம்மை விட்டு போனீர்
எமன் உம்மை அழைத்துச் சென்றானோ
அப்பப்பா! அப்பப்பா! என எமது வாய்
நிறைய அழைத்தோம்
இனி யாரைத்தான் அழைப்போமோ
உங்களது நேசத்திலும்
பாசத்திலும் பராமரிப்பிலும்
மகிழ்ந்திருந்த எங்களை
இடைநடுவில் தவிக்கவிட்டு
எங்கே தான் போனீரோ
எம்மை இவ்விடம் தவிர்க்கவிட்டு
விண்ணுலகம் சென்றது ஏனோ?
உங்கள் திருமுகம் காண
ஏங்குகின்றோம் அப்பப்பாவே
எம் முன்னே தோன்றி ஒரு
வார்த்தை பேசுங்களேன்

**- பேரப்பிள்ளைகள்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாம்புக்கடிகள்

விஷப்பாம்புகள் ஒரு சில தீவுகள் மற்றும் தென்துருவம் தவிர உலகெங்கும் காணப்படுகின்றன.

இலங்கையில் காணப்படும் நச்சுப்பாம்புகள்

1) கண்ணாடி விரியன்
2) சுருட்டை பாம்பு/ பால் சுருட்டை
3) பச்சை விரியன்/ கோப்பி விரியன்
4) நாகம்
5) எண்ணெய் விரியன்/ எட்டடி விரியன்

## விரியன்கள் (Viperidae)

இதில் சுருட்டைப்பாம்புகள், தென்னமெரிக்க ஈட்டித்தலை விரியன்கள், புதர் பாம்புகள் போன்ற குழிவிரியன்கள், புடையன்கள், ஐரோப்பிய புடையன்கள் வாள்விரியன் போன்றவை அடங்கும். இவை தீண்டினால் குருதி உறைதல் பாதிக்கப்படுதல் மற்றும் அதிர்ச்சியான மரணம் சம்பவிக்கும்.

## விரியன் கடித்தால் ஏற்படும் அறிகுறிகள்

1) கடித்த இடத்தில் வீக்கம் ஏற்படல்
2) குருதி கட்டிபடும் தன்மை இழக்கப்படும்
    - சிவப்பு நிறமான சிறுநீர் வெளியேறும்
    - உடற் துவாரங்களிலிருந்து குருதி வெளியேறல்
3) மையநரம்புத் தொகுதியில் ஏற்படும் பாதிப்புக்கள்
    - கண்ணைத்திறக்க முடியாமை
    - கண்களை அசைக்கும் தசைகள் செயலிழத்தல்

## இலப்பிடே

இதில் நாகம், நிரய்ற், மம்பா, பளிங்குப்பாம்பு ஆகியவை அடங்கும். இவை தீண்டும்போது நரம்பைப் பாதிக்கும். நஞ்சு உடலில் சேர்வதனால் சுவாசச் செயலிழப்பு, பலவீனம் மற்றும் இதயச் செயலிழப்பினால் மரணம் சம்பவிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகபாம்பு கடித்தால் ஏற்படும் அறிகுறிகள்

1) கடித்த இடத்தில் வீக்கம் மற்றும் சூழவுள்ள தோல் உரியும்

2) மைய நரம்புத்தொகுதியில் ஏற்படும் பாதிப்புக்கள்

சுவாசப்பொறிமுறை செயலிழத்தல்

(சுவாசத்தசைகள் செயலிழப்பதால்)

- கண்ணைத் திறக்க முடியாமை
- கண் தசைகள் பலவீனமடைதல்
- கை, கால்கள் பலவீனமடைதல்

3) குருதி கட்டிபடும் தன்மை பாதிப்படைவதில்லை

## பாம்பு கடியின் அறிகுறிகள்

1) தோலில் தெரியும் அடையாளம் (இது சிலவேளை சாதாரண தோல் நிறமாற்றம் போல இருக்கலாம்)

2) கடிபட்ட இடத்தில் வலியும் வீக்கமும் (30 நிமிடங்களிலிருந்து பல மணித்தியாலம் வரையில் இது மிக பொதுவாக ஏற்படும்)

3) கடித்த இடத்திலிருந்து தொடர்ச்சியான குருதிபெருக்கு

(விரியன் கடித்திருந்தால்)

4) நாடித்துடிப்பு வீதம் அதிகரித்தல்

5) சுவாசச்சிரமம்

6) பலவீனமடைதல்

7) கண்பார்வை மங்குதல்

8) குமட்டலும் வாந்தியும்

9) வலிப்பு

10) மயக்கம் (சுயநினைவிழப்பு)

11) நிணநீர்க்கணுக்கள் வீங்குதல்

12) சொப்பனங்கள் ஏற்படுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாம்புக்கடிக்கான சிகிச்சை**

1) கடித்த பாம்பை இனங்காணல் சரியான நச்சுமுறி மருந்தை தெரிவு செய்வதற்கு இது முக்கியமானது.

குறிப்பு:- பாம்பைக் கொல்வதற்கு முயற்சிப்பதன் மூலம் மேலும் பாம்புக்கடிக்கு ஆளாக கூடாது.

2) சில வகை உறிஞ்சிகள் பிரயோசனமானவை கடிக்கப்பட்டு 3 நிமிடங்களுக்குள் இந்த உபகரணம் பாவிக்கப்பட வேண்டும். உறிஞ்சியை 30 நிமிடங்களுக்கு அப்படியே காயத்தை உறிஞ்சிவிட வேண்டும். கோப்பை நிறைந்தவுடன் உறிஞ்சப்பட்டவற்றை ஊற்றிப் பின்னர் மேலும் தேவையெனில் மீண்டும் பயன்படுத்தலாம். இவை இலங்கையில் பயன்படுத்தப்படுவதில்லை.

3) சவர்க்கார நீர் கொண்டு காயத்தை மெதுவாக கழுவவும். இது கடித்த இடத்திலுள்ள நஞ்சைக் குறைக்கும். கடித்த இடத்தைக் கடுமையாகத் தேய்க்கக்கூடாது. இதனால் நஞ்சு உடலில் வேகமாக சேரும்.

4) நோயாளியை ஆறுதலாக படுக்க வைக்கவும்.

5) அதிர்ச்சி வைத்தியம் செய்யவும்.

6) சுவாசம் முதலியவற்றை கவனித்து தேவையெனில் சிகிச்சை அளிக்கவும்.

7) புகைபிடிக்க, உண்ண, குடிக்க அனுமதி வழங்க வேண்டாம் (வைத்திய சாலைக்குச் சென்றடைய நேரம் எடுக்குமெனில் நீர் மாத்திரம் அருந்தக் கொடுக்கலாம்)

8) இதய மட்டத்தில் கால் கைகளில் கட்டுப்போடலாம். கை கால்களை உயர்த்த வேண்டாம்.

9) ஆஸ்பத்திரிக்கு அல்லது ஏதேனும் மருத்துவ நிலையத்துக்கு நோயாளியை கொண்டு செல்லலாம்.

10) வைத்தியசாலையில் அனுமதித்து 24 மணித்தியாலம் வரை நோயாளியை கண்காணிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாம்புக்கடி சிகிச்சை முறையில் செய்யக்கூடாதவை

1) பாம்புக்கடியின்போது ஐஸ்கட்டிகள் முதலியவற்றை வைத்து குளிரச்செய்ய வேண்டாம்.

2) ரேணிக்கேயைப் போட வேண்டாம். இதனால் இழையங்கள் பாதிக்கப் படலாம்.

3) மின்சார அதிர்ச்சியை வழங்க வேண்டாம்.

4) கடித்த இடத்தை வெட்டவோ, திறக்கவோ முயல வேண்டாம். இது நிலைமையை மோசமாக்குவதோடு இழையங்களையும் காயப்படுத்தலாம்.

5) நோயாளிக்கு மதுபானமோ போதைப்பொருளோ கொடுக்க வேண்டாம்.

### தமிழ் வைத்தியம்

"பாம்புக்கடிக்கு மிகச்சிறந்த மருந்து வாழைச்சாறு" என்கிறார் தமிழறிஞர் கி.ஆ.பெ. விசுவநாதம். வாழைப்பட்டையை பிழிந்து சாறு எடுத்து பாம்பு கடித்தவரின் வாயில் புகட்ட வேண்டும்.

சாறு எடுப்பதற்குள் பற்கள் கிட்டிக்கொண்டால் புகட்டுவது கடினமாதலால் வாழைப்பட்டைகளைப் போட்டு அதன் மேல் கடிபட்டவரைப் படுக்க வைத்தால் கிட்டிக்கொண்ட பற்கள் சுலபமாகத் திறக்கும்.

## பொன் மொழிகள்

- நல்ல புத்தகமே சிறந்த நண்பன்.
- மகிழ்ச்சியே உடல் நலத்திற்கு முக்கிய காரணம்.
- வார்த்தை தவறினால் வாழ்வே தவறிவிடும்.
- கால் இடறினால் காயம் ஏற்படும்.
- சந்தி சிரிக்க வாழ்வதைவிட சத்தமில்லாமல் இறப்பது மேல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்ணுலகில்: 13 - 04 - 1934



விண்ணுலகில்: 07 - 09 - 2009

கைதடியை பிறப்பிடமாகவும் கைதடி நாவற்குழியினை
வதிவிடமாகவும் கொண்ட
அமரர்

# சின்னப்பா ஐயாத்துரை

எமது கிராமத்தின் மூத்த குடிமகனும்
முன்னணி விவசாயியும்
கால்நடைகளுக்கு கை வைத்தியமும்
செய்து காப்பாற்றியவருமான
அமரர் சின்னப்பா ஐயாத்துரை அவர்களின்
பிரிவால் துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கைதடி, நாவற்குழி
வாழ் மக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



❖ இறையடி எய்தியமை அறிந்து தேறுதல் செய்தோர்களுக்கும்,

❖ அந்திய நாளன்று உதவிய உறவினர், அயலவர், ஊரவர் மற்றும் ஏனையோர்களுக்கும்,

❖ செய்தி அறிந்து அல்லல் தொல்லைப்பட்டு நெடுந்தூர இடங்களில் இருந்து வந்து அஞ்சலி செய்தோர்களுக்கும்,

❖ வெளியிடங்களில் இருந்து அனுதாபச் செய்திகள் அனுப்பினோர்களுக்கும்,

❖ நினைவு மலரை ஆக்கம் செய்தோர்க்கும்,

❖ தீக்கடன் -நீர்க்கடன் - வீட்டுக்கிரியைகளில் நின்று உதவியோர்களுக்கும்,

❖ இம்மலரை சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய கிருஸ்ணா பிறிண்டேர்ஸ் நிறுவனத்துக்கும்,

❖ இன்னும் எம் நினைவிற்கு எட்டாது உதவியோர் யாரேனும் தவற விடுபட்டிருப்பின், அப்படியானோர்க்கும் எம் உள்ளம் நிறைந்த நன்றி மறவா நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

– குடும்பத்தினர்.

மறவன்புலோ
கைதடி நாவற்குழி, கைதடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.



Krishna Printers, Dr. Subramaniyam Rd, Chunnakam.

Sivaranjanam

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org